# 2024 Worldwide Crusade in Honour of the Immaculate Heart of Mary

**அன்னையின் மாசற்ற இதயத்தின் நினைவாக உலகளாவிய சிலுவைப்போர்.**
**திருஅவையில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு கடவுளின் உதவியை நாடுதல்,**

பாத்திமா நகரில்,அன்னை மரியாள்,செபமாலை செபிப்பதாலும் ,ஐந்து முதல் சனிக்கிழமை பக்தி முயற்சிகள் செய்வதாலும் , நாம் கடவுளின் சிறப்பு அருளை பெற முடியும் என்று கூறியுள்ளார்.

ஐந்து முதல் சனிக்கிழமை பக்தி முயற்சிகள் பின்வரும் முறைகளில் அமைகிறது:

தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை அன்று ஒப்புரவு அருட்சாதனம் பெறுவது; திருப்பலியில் கலந்து கொண்டு திவ்ய நற்கருணை பெறுவது; செபமாலை செபிப்பது; பதினைந்து நிமிடங்களுக்கு குறைந்தபட்சம் ஒரு தேவ ரகசியத்தை தியானிப்பது. இந்த பக்தி முயற்சிகள், நாம் அன்னை மரியின் மாசற்ற இதயத்திற்கு எதிராக செய்த பாவங்களுக்கு மனம் வருந்தி,செய்கின்ற செபமாகும்.

கத்தோலிக்க திரு அவை தற்போது சந்திக்கும் மிகப்பெரிய நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில்,பாத்திமா அன்னையின் சகோதர கூட்டமைப்பு உலகளாவிய ஆன்மீக சிலுவைப்போர் என்னும் ஆன்மீக பக்தி முயற்சியை ஆரம்பித்துள்ளது. இதில் தினமும் செபமாலை செபிப்பது,ஐந்து முதல் சனிக்கிழமை பக்தி முயற்சியை பின்பற்றுவது போன்றவைகளை செய்து அன்னையின் மாசற்ற இதயத்தின் வழியாக கடவுளின் உதவியை நாடுவது.
குறிப்பாக, ரோமை கத்தோலிக்க திரு அவைக்காக இறைவனின் உதவியை நாடுவது.

இந்த ஆன்மீக சிலுவைப் போர், ஜனவரி 2024 (ஜனவரி 6) முதல் சனிக்கிழமை தொடங்கி டிசம்பர் 2024 முதல் சனிக்கிழமை (டிசம்பர் 9) முடிவடைகிறது.

டிசம்பர் 8, 2023 அமல உற்பவ அன்னை பெருவிழா,

Confraternity of Our Lady of Fatima - 117 Hollywood Blvd. Steubenville, OH 43952 | info@livefatima.io